தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# காவிரி ஆற்றை மீட்டெடுக்க கருத்துரு

## கோவை வன மரபியல் நிறுவனம் தீவிரம்

**கோவை, ஜன. 2–**

காவிரி ஆற்றை மீட்டெடுக்க கருத்துரு தயாரிக்கும் பணியில், கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

நமது நாட்டில், பருவ மழையை நம்பியே விவசாயம் நடக்கிறது. மழைக் காலங்களில் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது; கோடையில் வறண்டு விடுகிறது.

பல மாநிலங்களில் வறட்சி ஏற்பட்டு, வேளாண்மை பாதிப்பதுடன், குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படுகிறது. இதற்கு தீர்வு காண, நாட்டில் உள்ள நதிகளுக்கு புத்துயிர் ஊட்டும் திட்டத்தை, மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் செயல்படுத்த உள்ளது.

இதில், காவிரி ஆற்றை மீட்டெடுப்பதற்கான கருத்துரு தயாரிக்க, கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்துக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்நிறுவன இயக்குனர் முருகேசன் தலைமையில் விஞ்ஞானிகள் கண்ணன் வாரியர், ரேகா மற்றும் வனத்துறை அதிகாரிகள் செந்தில்குமார், கதிர்வேல் கருத்துரு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

விஞ்ஞானி கண்ணன் வாரியர் கூறியதாவது:

ஆறுகளின் இருபுறமும் மரங்கள் வளர்க்கும்போது, அதன் வேர்கள் மற்றும் தாவரக்கழிவுகள், 'ஸ்பாஞ்ச்' போல் தண்ணீரை தேக்கி, ஈரப்பதத்தை பாதுகாக்கும்.

இவ்வாறு, படுகைகளில் நீர், 'ரீசார்ஜ்' செய்யப்படுவதால், ஆறுகள் வறண்டு போவது தடுக்கப்படுகிறது. காவிரியை புத்துயிரூட்டும் திட்டம், கர்நாடகா, தமிழகம், புதுச்சேரி மற்றும் கேரள மாநிலத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

காவிரி மட்டுமின்றி, 21 முக்கிய துணை ஆற்றுவழிகளிலும் உள்ள காடுகள், வேளாண் காடுகள் மற்றும் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்கும் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

நான்கு மாநிலங்களிலும் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்து வேளாண் துறை, தோட்டக்கலை அதிகாரிகள், விவசாயிகள், பழங்குடியினர், பொதுமக்கள் தொண்டு நிறுவனங்களின் ஆலோசனையை பெற்று, ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ப பல்வேறு, மாதிரிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் மத்திய அரசிடம் கருத்துரு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

153. News in Dinamalar, Coimbatore, 02.01.2020, DPR Cauvery, Rejuvenation of the River Cauvery through Forestry Interventions.